# TAMIL PRIMER.

பள்ளிக்கூடங்களிற்

பயிற்றுவிக்கவேண்டிய

# முதலாம் புத்தகம்.

௧௮௱௪௮௵.

இரண்டாம்பதித்தல்.

MADRAS:

PRINTED BY REUBEN TWIGG, AT THE CHRISTIAN KNOWLEDGE SOCIETY'S PRESS, VEPERY.

1848.

18A34

B

## உயிர்மெய்யெழுத்துக்கள்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |

## ௩. பாடம்.

### ஓரசைச்சொற்கள்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ கா கூ
கை கோ சா சீ சே சோ தா தீ
தூ தே தை நா நீ நே நை நோ
பா பூ பே பை போ மா மீ மூ
மே மை மோ யா வா வீ வை வௌ

| | | | | |
|---|---|---|---|---|
| அடி | எலி | குடி | சுறா | தூள் |
| அணி | எறி | குடை | செடி | தெரு |
| அணை | ஏர் | குரு | செயல் | தென் |
| அது | ஏன் | குழி | செய் | தேர் |
| அவன் | ஒரு | கூர் | செல் | தேள் |
| அறம் | ஒளி | கூழ் | செவி | தேன் |
| ஆண் | ஒலி | கூன் | சொரி | தொடர் |
| ஆம் | கடை | கெடு | சொல் | தோல் |
| ஆல் | கடல் | கேள் | சொறி | தோள் |
| ஆள் | கண் | கொடி | தடி | நகர் |
| இசை | கதி | கொடு | தடை | நடு |
| இடி | கதை | கொலை | தரை | நடை |
| இணை | கறி | கோண் | தலை | நரி |
| இரை | கரை | கோல் | தறி | நதி |
| இவள் | கல் | கோள் | தாம் | நாய் |
| உடை | கால் | சகி | தாள் | நாள் |
| உயிர் | கிடை | சரி | தான் | நிலை |
| உரை | கிளி | சிலை | திசை | நீர் |
| உளி | கிளை | சினை | திரு | நுனி |
| ஊர் | கீழ் | சீர் | துணி | நூல் |
| எரி | குகை | சுமை | துணை | நெய் |

| | | | | |
|---|---|---|---|---|
| நெல் | பிணை | போல் | முறி | வாள் |
| நோய் | புகை | மகன் | மெய் | வான் |
| பகல் | புலி | மடம் | மேல் | விடை |
| பகை | புல் | மணி | மோர் | விதி |
| பசி | புளி | மண் | வகை | விதை |
| பசு | பெண் | மயில் | வடு | வினா |
| படி | பெயர் | மலை | வலி | வினை |
| படை | பேய் | மழை | வலை | வீண் |
| பணை | பேர் | மான் | வழி | வெடி |
| பாய் | பொய் | மின் | வளை | வெளி |
| பார் | பொன் | மீன் | வாய் | வேர் |
| பால் | பொருள் | முடி | வால் | வேல் |

---

## வாசகப்பாடம்.

க.

| | | |
|---|---|---|
| வினா கேள் | நெல் அள | சீர் படு |
| விடை சொல் | பகை விடு | வலை விரி |
| கறி தா | கோல் பிடி | மணி அடி |
| தீ அவி | பால் குடி | நூல் திரி. |

உ.

| | | |
|---|---|---|
| வாய் திற | நெய் வார் | வழி போ |
| நாள் வரும் | சுமை யெடு | பொருள் கேள் |
| கடை வை | கல் எறி | அறம் செய் |
| துணை இரு | புளி கொடு | தலை சாய். |

௩

| | |
|---|---|
| பால் தேன் தா | வழி நடை பார் |
| பாய் குடை விரி | புலி தேள் கொல் |
| பகை பொய் தள் | கால் கை அசை |
| வலை தடி வீசு | இனம் கோள் விடு |
| நீர் மோர் குடி | தினை நெல் விதை |
| நோய் வலி சகி | மெய் வகை சொல். |

௪.

| | |
|---|---|
| கல் கற்கள் | கல்லில் கற்களில் |
| கல்லை கற்களை | கல்லது கற்களது |
| கல்லால் கற்களால் | கல்லிடத்தில் கற்களிடத்தில் |
| கல்லுக்கு கற்களுக்கு | கல்லே கற்களே. |

௫.

| | |
|---|---|
| நீ போ | பையில் எடு |
| ஆளைப் பார் | எனது கால் |
| கையால் அடி | தீயில் வை |
| கடைக்கு வா | தாயே சொல். |

௬.

| | |
|---|---|
| ஈகள் வரும் | புலிகளில் தப்பு |
| நரிகளைப் பிடி | குடிகளது பெயர் |
| பற்களால் கடி | வழிகளில் செல் |
| மலைகளுக்கு நட | சிறியரோ கேளும். |

௭.

| | |
|---|---|
| நீ படி | கோலைத் தா |
| அதைப் பாடு | செடியில் போ |
| அவனைப் பார் | தலையில் அடி. |
| இதை எடு | தெருவில் ஓடு |
| அவளைத் தேடு | கதையைச் சொல் |
| குடையைக் கொடு | பெயரைக்கேள். |

௮.

| | |
|---|---|
| கையை வாயில் போடு | தாயினது வாலை பிடி |
| தீயால் அதைச் சுடு | நதியில் நீர் ஆடு |
| அவளுக்கு கையால் கொடு | குடிகளே ஊரில் |
| பணத்தில் அவனுக்கு கட்டு | போங்கள் |

௯.

ஈ சிறிது
யானை பெரிது
மலை உயர்ந்தது
நதி நீண்டது
புல் பசியது
நீர் குளிர்ந்தது

கல் வலியது
தேன் இனியது
புலி கொடியது
பொய் தீயது
மெய் நல்லது
பேய் கெட்டது.

௰.

பசு பால் தரும்
எலி குழி பறிக்கும்
மீன் நீர் ஆடும்
புலி உயிர் கொல்லும்
பொய்ச்சொல் கெடும்
நாய் நரி தொடரும்

ஊர் ஆள் கொள்ளும்
நதி நீர்பாயும்
சுறு மீன் கடிக்கும்
தேள் கால் கொட்டும்
கிளி சொற் பேசும்.
தெரு வழி போகும்.

௰௧.

பொறி, மெய் வாய் கண் மூக்கு செவி.

புலன், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்.

பூதம், நிலம் நீர் தீ காற்று விசும்பு.

உலோகம், பொன் வெள்ளி செம்பு இரும்பு ஈயம்.

மாபாதகம், கொலை களவு கள் காமம் பொய்.

இலக்கணம், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி

செடியில், வேர் கிளை இலை பூ காய்.

குளத்தில், கரை மடை கால் நீர் மீன்.

வீட்டில், கல் நீறு ஓடு மரம்.

## உ. பாடம்.

### ஈரசைச்சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| அகங்கை | எண்ணம் | கேடகம் | தடாகம் |
| அகரம் | எறும்பு | கொக்கு | தாங்கல் |
| அகலம் | ஏந்திரம் | கோபுரம் | தாமதம் |
| அங்கம் | ஏந்தல் | சகாயம் | திங்கள் |
| அசடர் | ஐந்திணை | சங்கம் | தியானம் |
| அசனம் | ஐம்பால் | சட்டை | திருட்டு |
| அடர்பு | ஒட்டகம் | சத்தம் | தீங்கு |
| ஆகமம் | ஒடுங்கு | சருக்கரை | தீட்டல் |
| ஆசனம் | கடகம் | சாதகம் | தீவனம் |
| ஆடவர் | கடவுள் | சாந்தம் | துக்கம் |
| ஆமை | காகம் | சித்தம் | துரிதம் |
| ஆலயம் | காந்தல் | சிவப்பு | தூக்கம் |
| ஆன்மா | கிடாரம் | சிறப்பு | தூசு |
| இகழ்வு | கிண்ணம். | சீதனம் | தூபம் |
| இரும்பு | கிரகம் | சுகிர்தம் | தென்றல் |
| ஈகை | கிரகணம் | சுயம்பு | தைத்தல் |
| ஈடு | கிராமம் | சுருக்கு | தோட்டம் |
| ஈரம் | கிரீடம் | சூரியன் | தோன்றல் |
| உட்டணம் | கிலேசம் | சூழ்தல் | நகரம் |
| உணர்வு | கீதம் | செல்வம் | நஞ்சு |
| உண்டல் | கீர்த்தி | சேகரம் | நட்பு |
| உதையம் | குற்றம் | சேவகம் | நரகம் |
| ஊக்கம் | கூச்சம் | சேணம் | நாடகம் |
| ஊருணி | கூட்டம் | சௌரியம் | நாயகர் |
| ஊன்றி | கூத்து | தங்கம் | நிகண்டு |
| எச்சம் | கெடுதல் | தஞ்சம் | நித்தம் |

| | | | |
|---|---|---|---|
| நிதானம் | பொருப்பு | யோக்கியம் | போனாய் |
| நியாயம் | போசனம் | யோசனை | போவாய் |
| நினைப்பு | போதகம் | வகுப்பு | போகிறான் |
| நீக்கல் | மக்கள் | வட்டம் | போனான் |
| நீட்டல் | மச்சம் | வணக்கம் | போவான் |
| நூதனம் | மரணம் | வண்ணம் | போகிறோம் |
| நோண்டல் | மருந்து | வராகன் | போனோம் |
| பக்கம் | மாத்திரை | வரிசை | போவோம் |
| பகைஞர் | மாமன் | வருடம் | போகிறீர் |
| பஞ்சம் | மார்க்கம் | விகாதம் | போனீர் |
| பட்டம் | மாளிகை | விசாரம் | போவீர் |
| பித்தம் | மிருகம் | விசாலம் | போகிறார் |
| பிரம்பு | மின்னல் | வீக்கம் | போனார் |
| பிராணன் | மீட்பர் | வீரியம் | போவார் |
| பிரேதம் | முகவுரை | வெட்கம் | போக |
| பிறப்பு | முத்திரை | வெண்மை | போய் |
| பீடம் | மூர்க்கர் | வெளிச்சம் | போனால் |
| புருடர் | மேகம் | வெறுப்பு | போகிற |
| புலவர் | மேட்டிமை | வேண்டல் | போன |
| பூசுதல் | மையம் | வேதம் | போகும் |
| பூரணம் | மோசம் | போகிறேன் | போ |
| பெருக்கம் | மோதிரம் | போனேன் | போகிறது |
| பேதம் | யாக்கை | போவேன் | |
| பேழை | யுத்தம் | போகிறாய் | |

௧.

அவன் போனான்.
இவள் வந்தாள்.
அது ஓடிற்று.
இவனைக் கண்டேன்.
அவனுக்குச்சொன்னாய்
அதைக்கூட்டினேன்.

எவர்களை அடித்தோம்
எப்போது படித்தோம்.
என்னத்தைச் சொன்னார்.
அங்கே வந்தாரா.
இங்கேசேருவோம்.
நதியிற் பாய்ந்தீர்.

உ.

நீங்கள் வாசியுங்கள்.
அவர் கேட்பாரா.
நான் காண்கிறேன்.
உங்களுக்குத் தெரியுமா.
சொன்னால் போதும்.
படித்தால் வரும்.

பொய் சொல்லாதே.
மரத்தில் ஏறினான்.
குளத்தில் விழுந்தோம்.
மழையைக் கண்டீர்கள்.
மீன் மறைந்தது.
புல் முளைத்தது.

௩.

இடி, பட பட என்று விழும்.
நீர், சல சல என்று ஓடும்.
தீ, மொக மொக என்று எழும்.
மரம், மட மட என்று சாயும்.
குளிர், கிடு கிடு என்று ஆட்டும்.
மழை, சிணு சிணு என்று தூற்றும்.
பழம், குள குள என்று கெடும்.
பொன், தள தள என்று தோன்றும்.
நெல், பள பள என்று பொரியும்.
பயிர், குளு குளு என்று வளரும்.
பூ, குமு குமு என்று மணக்கும்.
வெயில், தக தக என்று வரும்.

ச.

புலியைக் கண்டு பயந்தான்.
ஒளியைப் பார்த்துப் பூரித்தான்.
நரியை அடித்து ஓடினான்.
குருவை நோக்கி உரைத்தான்.
இடியைக் கேட்டு நடுங்கினான்.
அடியைப் பட்டுக் கலங்கினான்.
வழியைத் தப்பி அலைந்தான்.
கண்ணை மூடி உறங்கினான்.

கையை வீசி நடந்தான்.
நகரை விட்டுத் தப்பினன்.
மடத்தைக் கட்டி வாழ்ந்தான்.
பசியை ஆற்றித் தூங்கினன்.

௫.

கோலை எடுத்து அடிப்பேன்.
கிளையைத் தறித்து வீசுவேன்.
ஏரைப் பிடித்து உழுவேன்.
உடையைத் தரித்து நடப்பேன்.
கதையை எழுதிப் படிப்பேன்.
ஆலில் ஏறிக் குதிப்பேன்.
செடியிற் புகுந்து ஒளிப்பேன்.
தெருவில் ஓடி ஆடுவேன்.
அணையிற் படுத்து உறங்குவேன்.
ஊரைச் சுற்றித் திரிவேன்.
நூலைப் பிரித்துக் கட்டுவேன்.
மெய்யைச் சொல்லி ஆளுவேன்.

௬.

கல்லால் எறிந்து கொலை செய்தாய்.
மலையில் ஏறி இளைப்பு அடைந்தாய்.
புலியைக் கண்டு ஓடிப் போனாய்.
வெடியைச் சுட்டுத் தப்பிக் கொண்டாய்.
மோரைக் குடித்துத் தாகந் தீர்ந்தாய்.
பகையைத் தள்ளி நன்மை செய்தாய்.
போரிற் சேரப் படை எடுத்தாய்.
மணியைக் கேட்டுப் பள்ளியில் வந்தாய்.
நாயைக் கூட்டிக் காட்டிற் சென்றாய்.
பேனா எழுதி ஓலையைக் கொடுத்தாய்.
தேனைத் தேடி நீரில் விழுந்தாய்.
கரையை ஏறிக் கதியை அடைந்தாய்.

௭.

வேத ஆகமத்தைப் படி.
நல்லோர் சங்கத்தைத் தேடு.
தேவ ஆலயத்தைச் சேர்.
சாந்த குணத்தை அடை.
நித்தஞ் செபத்தைச் செய்.
புலவர் சொல்லைக் கேள்.
பகைஞர் கூட்டத்தை விடு.
மீட்பர் நாமத்தைப் புகழ்.
சத்திய மார்க்கத்தை அறி.
நீதி நியாயத்தைச் செய்.
திவ்விய சகாயத்தைப் பெறு.
பாவ மயக்கத்தைத் தவிர்.

௮.

பாடம் படித்து வருவாய்.
கையை நீட்டிக் கொடுப்பாய்
வட்டம் எடுத்துச் சுற்றுவாய்.
யோசனை பண்ணிச் சொல்லுவாய்.
பிரம்பு ஓங்கி அடிப்பாய்.
பட்டம் பெற்று வாழ்வாய்.
சேணம் போட்டு ஏறுவாய்.
ஊரிற் சென்று தங்குவாய்.
சேவகம் பார்த்துப் பிழைப்பாய்.
சட்டங் கட்டி நடப்பாய்.
கடனை வாங்கிச் செலுத்துவாய்.
ஆலயங் கட்டி வணங்குவாய்.

௯.

நன்மை செய்ய மறவாதே.
சத்தியஞ் சொல்ல அஞ்சாதே.
பகையைக் கொள்ள நினையாதே.

௰௨

பெருமை காட்டப் பாராதே.
கூத்தைப் பார்க்கப் போகாதே.
கொள்ளை அடிக்கச் சம்மதியாதே.
மருந்து சாப்பிட மறாதே.
வேதத்தை இகழத் துணியாதே.
செலவம் அடைய விரும்பாதே.
குற்றஞ் சாட்டத் தேடாதே.
நியாயந் தப்பச் செய்யாதே.
நீதி அறத் திராதே.

௰.

சாந்த உத்தாரங் கோபத்தை ஆற்றும்.
கடந்த காலம் இனி வராது.
பாவ சிந்தை மனதைக் கெடுக்கும்.
செல்வப் பொருள் கவலை கூட்டும்.
சத்திய வார்த்தை பொய்யை வெல்லும்.
நன்றி அறிதல் நன்மையைத் தரும்.
தேவ கிருபை நெஞ்சைக் காக்கும்.
பொய் மதங்கள் அழிவு காணும்.
நிச மார்க்கஞ் செயங் கொள்ளும்.
பொருள் ஆசை கேட்டைத் தரும்.

௰௪.

பாவக் கேட்டிற் பிறந்தேன்.
குற்றஞ் செய்து வளர்ந்தேன்.
பொய்யைச் சொல்லித் திரிந்தேன்.
தேவ சொல்லைத் தட்டினேன்.
அவர் சினத்தை மூட்டினேன்.
காலம் போக்கிக் கிடந்தேன்.
சுவாமி என்னை ஏவியும்.
இயேசு என்னை இரட்சியும்.
சுத்த ஆவி தந்திடும்.

௧௧

கெட்ட நெஞ்சைப் பேர்த்திடும்.
துர்க் குணத்தை மாற்றிடும்.
நல்ல பிள்ளை ஆக்கிடும்.

௧௨.

எலிகள் மிகவும் இருந்த வீட்டில்,
பூனை ஒன்று வந்தது.
தினந் தினம் எலியைப் பிடிக்க,
அவைகள் திகில் பட்டன.
வந்த தீமைக்கு உபாயம் பண்ண,
ஒரு இடத்திற் கூடின.
சின்ன எலி ஒன்று சொன்னது,
வீணாய்ப் பயந்து இருப்பதேன்?
எனது சொல்லைக் கேட்டுச் செய்தால்,
இனிக் கேடு வராது.
பூனை தூங்குங் காலம் பார்த்து,
கழுத்தில் மணி கட்டுங்கள்.

௧௩.

நீள வாலன் என்ற எலி.
கிழடு புத்தி உள்ளது.
இந்தச் சொல்லைக் கேட்ட போது,
நல்ல யுத்தி இதுதான்.
பூனை கழுத்தில் மணி கட்ட
நம்மில் எவன் துணிவான்?

௧௪.

எலிகள் ஒன்றும் மணியைக் கட்ட,
துணிந்து கொள்ள மாட்டாமையால்
நீள வாலன் திரும்பப் பேசி,
யோசனை சொல்லிக் கொடுத்தது.

௰௪

தரையில் நீங்கள் நடமாடாமல்,
உயர இருந்து விடுங்கள்.
பூனைக்கு எட்டாத இடத்தைப் பார்த்து,
சுகமே ஓடித் திரியுங்கள்.

௰௫.

இது நல்ல புத்தி என்று,
எலிகள் எல்லாம் போயின.
பூனை இரை அகப் படாமல்,
இங்கும் அங்கும் அலைந்தது.
உபாயம் பண்ண வேண்டும் என்று,
சுவரில் அடித்த முளைமேல்,
காலால் தொங்கி கண்ணை மூடி,
அசைவு இன்றிக் கிடந்தது.

௰௬.

நீள வாலன் அதைக் கண்டு,
காரியம் அறிந்து கொண்டது.
பூனையைப் பார்த்துச் சிரிப்பாக,
தந்திரியே என் சொல்லைக் கேள்.
உன் மீசை பிடுங்கித் தோலை உரித்து,
பஞ்சு போட்டுத் திணிக்கினும்,
கிட்டவே வருவது இல்லை.
உன் உபாயம் அறிவோமே.
ஆனதாலே வேறே இடம்,
தேடி இரை பிடியேன்.

## ௯. பாடம்.

### மூவசைச்சொற்கள்.

| | | |
|---|---|---|
| அக்கிரமம் | கீதங்கள் | தட்டுமுட்டுகள் |
| அஞ்ஞானம் | குருமார்கள் | தண்டித்தல் |
| அதிகாரம் | கூப்பாடு | தாம்பூலம் |
| அநியாயம் | கெம்பீரம் | தாறுமாறு |
| அலங்காரம் | கெர்ச்சிக்குதல் | திருட்டாந்தம் |
| அனுகூலம் | கைமாறு | தீர்மானம் |
| ஆகாயம் | கோதும்பை | துப்புரவு |
| ஆச்சரியம் | கோத்திரிகை | தூதாட்கள் |
| ஆதாரம் | கோவில்கள் | தெய்வீகம் |
| ஆபரணம் | கௌதாரி | தேசங்கள் |
| ஆரோக்கியம் | சங்காரம் | தொண்ணூறு |
| இரட்சிப்பு | சங்கீதம் | தொழிலாளி |
| இறுமாப்பு | சஞ்சாரம் | நட்சத்திரம் |
| உத்தியோகம் | சந்தேகம் | நாற்காலி |
| உபகாரம் | சந்தோஷம் | நிற்பந்தம் |
| உபதேசம் | சமாதானம் | நீதிபரன் |
| உபயோகம் | சம்பந்தம் | நீரோட்டம் |
| எக்காளம் | சாஷ்டாங்கம் | நேத்திரங்கள் |
| ஏகாந்தம் | சாதிக்காய் | பங்காளி |
| ஐயோத்தி | சாப்பாடு | பஞ்சாங்கம் |
| ஒத்தாசை | சிங்காரம் | பட்டணங்கள் |
| ஒப்புரவு | சிருட்டித்தல் | பரிபாலனம் |
| ஒவ்வொன்று | சீயக்காய் | பாஞ்சாலம் |
| ஓநாய்கள் | சுண்ணாம்பு | பாதாளம் |
| கலியாணம் | சுவிசேஷம் | பிரசங்கம் |
| காசுமீரம் | சூத்திரங்கள் | பிரயோசனம் |
| கின்னரம் | சேனாபதி | பீடங்கள் |
| கிருபாசனம் | சௌந்திரியம் | புண்ணியவதி |

௰௪

தரையில் நீங்கள் நடமாடாமல்,
உயர இருந்து விடுங்கள்.
பூனைக்கு எட்டாத இடத்தைப் பார்த்து,
சுகமே ஓடித் திரியுங்கள்.

௰௫.

இது நல்ல புத்தி என்று,
எலிகள் எல்லாம் போயின.
பூனை இரை அகப் படாமல்,
இங்கும் அங்கும் அலைந்தது.
உபாயம் பண்ண வேண்டும் என்று,
சுவரில் அடித்த முளைமேல்,
காலால் தொங்கி கண்ணை மூடி,
அசைவு இன்றிக் கிடந்தது.

௰௬.

நீள வாலன் அதைக் கண்டு,
காரியம் அறிந்து கொண்டது.
பூனையைப் பார்த்துச் சிரிப்பாக,
தந்திரியே என் சொல்லைக் கேள்.
உன் மீசை பிடுங்கித் தோலை உரித்து,
பஞ்சு போட்டுத் திணிக்கினும்,
கிட்டவே வருவது இல்லை.
உன் உபாயம் அறிவோமே.
ஆனதாலே வேறே இடம்,
தேடி இரை பிடியேன்.

௪.

யோசேப்புத் தன் சகோதரரால் மிகவுந் துன்பம் பட்டான்.
அவர்களாலே பெரிய குழியில்த் தள்ளப்பட்டான்.
பிற்பாடு அடிமையாக விற்கப் பட்டான்.
எகிப்பத்து தேசத்தில் ஒழுங்காய் நடந்தான்.
வாலிப இச்சைகளை அடக்கிக் கொண்டான்.
இராசாவினாலே பெருமை அடைந்தான்.
தேசத்துக்கு எல்லாம் மந்திரி ஆனான்.

௫.

தாவீது ஆடுகளை மேய்த்து வந்தான்.
கரடியுஞ் சிங்கமும் பிடித்துக் கொன்றான்.
கவண்டால் இராட்சதனை வென்று போட்டான்.
சிம்மாசனம் ஏறி அரசு ஆண்டான்.
எருசலேம் நகரியிற் சிறப்பாய் வாழ்ந்தான்.
சிங்காரமாய் பல கீதங்களைச் செய்தான்.

௬.

சாலோமோன் இராச்சியபரிபாலனம்பண்ணினான்
இளமையில் அநேக கல்விகளைக் கற்றறிந்தான்.
எருசலேமிற் சிறந்த ஆலயத்தைக் கட்டுவித்தான்.
மகனுக்கு நீதிமொழிகளை ஓதுவித்துப் புத்திவருத்தினான்.

௭.

தானியேல் தீர்க்கதரிசி பத்தியுள்ளவனாயிருந்தான்
தேவனை வணங்கினதற்காகச் சிங்கங்களின் கெவியிற்பொடப்பட்டான்.
அவன் மெய்த்தேவனை நம்பினபடியாற் சேதமின்றிக் காக்கப் பட்டான்.
இனி வருங் காரியங்களை விவரமாய் சொன்னான்.

௮

ஆஸ்தி சம்பத்து உடையவனாகிய ஒருவர்த்தகன் இருந்தான்.

அவன் தன் பல்லக்குச்சுமக்கிற ஆட்களை அழைத்துப் பசுமாட்டுக்குநாள்தோறும் புல்லுவெட்டிக் கொண்டுவந்து போடுங்கள் என்றான்.

அதற்கு அவர்கள் நாங்கள் பல்லக்குமாத்திரஞ் சுமப்போம் வேறேவேலை செய்யமாட்டோம் என்றார்கள் இப்படி இருக்கும் ஒருநாள் பசுவின்கன்று வெளியில் ஓடிப்போயிற்று அப்பொழுது வர்த்தகன் அந்தச் சிவிகையாரைப்பார்த்து கன்றுக்குட்டியைத்தேடிப் பிடித்துக்கொண்டு வாருங்கள் என்றுசொல்ல அவர்கள் நாங்கள் பல்லக்குச்சுமக்கிறவர்களோ மாடு மேய்க்கிறவர்களோ என்றார்கள்.

௯.

அப்போது வர்த்தகன் அவர்களுக்குப் புத்திவரும்படியாகச் செய்யவேண்டும் என்று யோசித்து மத்தியான வேளையிலே பல்லக்குக் கொண்டுவரச் சொல்லி அதிலே தாம் ஏறிக் கன்றுக்குட்டியைத் தேடநெருஞ்சிமுள்ளுஇருக்கிற காட்டுமார்க்கமாய்ப் போகச்சொன்னான். அவர்கள்அப்படியேபோய்த் திரிந்து அவதிப் படுகையில் வர்த்தகன் இடத்தில் முறையிட்டார்கள். அதற்கு அவன் பல்லக்குச்சுமக்கிறது உங்கள் கடமை, கன்றுக்குட்டியைத்தேடுகிறது என்னுடையகடமை, என்றுசொல்லி அவர்களைப் பல்லக்குநிறுத்தாமற்சுமக்கும்படிசெய்தான் அன்று முதல் அவர்கள் நல்லபுத்தி அடைந்து எசமான் ஏவும் எந்தக் காரியத்தையுஞ் செய்வது கடமை என்று ஒப்புக்கொண்டார்கள்.

௰.

ஞானக்கண்ணு பனையையேறி அந்திசந்தி பாளை சீவுவான்.
அன்னம்மை விறகுகூட்டிப் பதநீரைநன்றாய்க் காய்ச்சுவாள்.
பாக்கியம் சிரட்டை ஒழுங்காய் வைத்து வேண்டிய படி திட்டமாய் வார்த்துக்கொள்வாள்.
மாசிலாமணி அதைநிறுத்துவாங்கிப் பலவூர்க்கடைகளுக்கு அனுப்புவான்.
வேதமுத்து முதலான பள்ளிப்பிள்ளைகள் அதைக் காசுக்கு வாங்கிச் சாப்பிடுவார்கள்.

௰க.

அலரி, செவ்வந்தி பிச்சி, இருவாச்சி, முல்லை, மல்லிகை, பன்னீர், மகிழ், தாழம்பூ, சண்பகம், தாமரை, நீலோத்பலம், இவை மணமுள்ள புட்பங்கள்.

௰உ.

முண்முருக்கு, கற்ருழம்பூ, புரசு, பூவரசு, ஆத்தி, எருக்கிலை, கள்ளிப்பூ, செம்பரத்தை, வாடாமல்லிகை, இவை மணம் இல்லாத புட்பங்கள்.

௰௩.

ஆல், புளி, நாவல், மருது, வேம்பு, மா, பலா, இலுப்பை, இவைமுதலானவை நிழலுள்ள மரங்களாம்.

௰௪.

பனை, தென்னை, கமுகு, வாதமடக்கி, முருங்கை, இலவு, அகத்தி, கூந்தற்கமுகு, இவைமுதலானவை, நிழலில்லாத மரங்களாம்.

## ௪௰. பாடம்.

### நாலசைச்சொற்கள்.

| | |
|---|---|
| அக்கசாலையர் | சாஸ்திரவாதி |
| ஆசந்திரார்க்கம் | சாயங்காலம் |
| ஆசாபாசம் | சித்திரகாரன் |
| ஆசீர்வாதம் | சூதாடுவோர்கள் |
| ஆட்டுக்குட்டி | சூரியகாந்தம் |
| ஆரம்பித்தல் | செங்கோலரசன் |
| உத்திரவாதம் | செம்மறியாடு |
| ஊசிக்காந்தம் | சோம்பற்காரன் |
| ஐப்பசிமாதம் | ஞானத்திரவியம் |
| கட்டுப்பாடு | ஞானவிளக்கம் |
| கருப்புக்கட்டி | தந்திரகாரன் |
| காண்பிக்கிறது | தாமிரவருணி |
| காவற்காரன் | திருநெல்வேலி |
| கீரிப்பிள்ளை | திருமங்கிலியம் |
| கூடாரங்கள் | துரிதக்காரன் |
| கூப்பிடுதூரம் | தூற்றுக்கூடை |
| கூர்ச்சரதேயம் | தோட்டக்காரன் |
| கெட்டிக்காரன் | நியாயாதிபதி |
| கையாந்தகரை | நீடியசாந்தம் |
| கொடிமுந்திரிகை | பரமானந்தம் |
| சக்கிரவர்த்தி | பள்ளிக்கூடம் |
| சதுரக்கள்ளி | பாக்கியசாலி |
| சத்தியவசனம் | பாவவிமோசனம் |
| சந்திரகிரணம் | பிரத்தியாகாரம் |
| சந்தோஷங்கள் | பைத்தியகாரன் |
| சம்பாதித்தல் | பொக்கிஷகாரன் |
| சம்பாஷணைகள் | மாடப்புறாக்கள் |
| சம்பிரதாயம் | மூலாதாரம் |
| சாதுரப்பாகம் | மெல்லியபுடவை |

க.

உலக இரட்சகர் இயேசுநாதர் தேவமைந்தரும்.
பெத்லேகேமில் பாலகனாய்க் கன்னியிடத்திற் பிறந்தார்.

மேய்ப்பருஞ் சாஸ்திரிமாருந்தேடிவந்து அவரைத்தொழுதார்கள்.

ஏரோதிராயன் அவரைக்கொல்லவேண்டிய பிரயத்தனம் பண்ணினான்.

மரியாளுக்கும் யோசேப்புக்குங்கீழ்ப்படிந்துபரிசுத்தமாய் நடந்தார்.

உ.

முப்பது வயது உள்ளவராய் ஞானஸ்நானம் பெற்றார்.

எல்லோருக்கும் நன்மைசெய்து ஊர்கள்தோறுந்திரிந்தார்.
அவர்சொல்லக் குருடர் கண்திறந்துபார்த்தார்கள்.
கால்வழங்காத சப்பாணிகள் சுகமாய்நடந்து ஓடினார்கள்.
மூச்சுவிட்டு மரித்தவர்கள் உயிர் அடைந்து வாழ்ந்தார்கள்.

ங.

மனிதருக்கு நல்லுபதேசத்தைப் போதித்துச் சீஷர் பன்னிருவரையுந் தெரிந்துகொண்டார்.
உவமையாய்த் திவ்விய காரியங்களைக்காட்டி சிற்றறிவோருக்கு இரங்கினார்.
பூதர்கள் அவரை அசட்டைபண்ணி அவர் உபதேசத்தை விரோதித்தார்கள்.

௪.

பாவிகளுக்கு மன்னிப்பு உண்டாக்கும்படி பாத
கர் கையிற்கொடுக்கப்பட்டார்.
சிலுவையில் அறைந்து சொல்லுக்கடங்காத கஸ்
தியைப் பட்டார்.
மரித்த அவர் மகிமையோடே உயிர்த்து எழுந்தார்.
பலமுறையாய்த்தம்மைச்சீஷருக்குக் காட்டிச் சிற
ப்போடே வானத்துக்கு ஏறினார்.
அவர் உபதேசஞ் சுவிசேஷத்தில் அடங்கி உலகம்
எங்கும் பரவிற்று.
தம்மை நம்பி நடந்தோருக்குமோட்சத்தைக்கொ
டுப்பார்.
துன்மார்க்கர் எல்லாரையும் நரகத்தில்த்தள்ளுவார்.

ரு.

மிகுந்த வெயில் உண்டாயிருந்த ஒருநாள் மலை யினின்று ஓடுகிற ஆற்றங்கரையில் ஒரு ஓநாய்வ ந்து தண்ணீர் குடிக்கையில் ஒரு ஆட்டுக்குட்டியுஞ் சற்றே தூரத்தில்நின்று குடித்துக்கொண்டிருந்த து. அப்போது ஓநாய் அதனோடு சண்டைபிடிக்க வேண்டுமென்கிறயோசனைகொண்டு பயலே நான் குடிக்கிற தண்ணீரைக்கெடுக்க நீ சேற்றைக்கலக்கி விடுகிறது என்னடா என்று கோபமாய்ச்சொல்ல ஆட்டுக்குட்டியானது ஐயா தாங்கள் இருக்கிற இட த்திலிருந்தல்லவோ தண்ணீர் இப்படி இறங்கிவரு கிறது ஆகையால்த்தாங்கள் என்மேற்கோபங்கொ ள்ளுகிறது நியாயமல்ல என்று சாந்தத்தோடே உ த்தரஞ் சொல்லிற்று. அதற்கு ஓநாய், நீ இப் போது செய்தது போகட்டும். ஆகிலும், நீ ஆறு மாசக்காலமாய் என்னைக்குறித்து வெகு அபதூறு பேசியிருக்கிறாய் என்று, பலபேராலே கேள்வியா னேன், என் ஆட்டுக்குட்டி ஐயாவே நான் பிறந்து

இன்னம் ஆறுமாதம் ஆகவில்லையே இப்படி என்னைக்குறித்துப் பொய்சொல்லுகிறவர்களுடைய பேச்சை நம்பலாமா என்று கேட்க ஓநாய், அதென்னமோ எனக்குத்தெரியாது. நீயே அப்படி அபதூறு பேசியிராவிட்டாலும் உன் அப்பன் பேசியிருப்பான். அவன் சொல்லுக்கு நீ தான்உத்தரவாதி என்று சொல்லி, ஆட்டுக்குட்டிமேலே பாய்ந்து கடித்துக் கொன்று போட்டது. இவ்விதமாய்ச் சண்டைக்குணமுள்ளவர்கள் நியாயம் இல்லாத எந்த முகாந்தரத்தையும் இட்டு சண்டை பிடிக்க வழிபண்ணுவார்கள்.

சா.

பணக்காரன் ஒருவன் தன் தகப்பனுக்கு ஓட்டிலே கஞ்சி வார்த்துக்கொண்டுவந்தான். அவன் பிள்ளை அதைப்பார்த்து அந்த ஓட்டை எடுத்து ஒளித்துப்போட்டான். பின்பு அந்த பணக்காரன் தன்னுடைய தகப்பனைப்பார்த்து ஓடு எங்கே என்று கேட்டு அடித்தான் அந்தபையன் அப்பா என் பாட்டனை அடியாதே. நானே அந்த ஓட்டை எடுத்து ஒளித்துவைத்தேன். ஏன் என்றால், நான் பெரியவனான பின்பு உனக்கு வேறே ஓடு சம்பாதிக்க மாட்டேன் என்றான். அதைக்கேட்டுப் பணக்காரன் வெட்கப்பட்டு, அன்றுமுதல்த் தன் தகப்பனை மெத்தச் சவுக்கியமாக வைத்து இருந்தான்.

எ.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி, இவ்வேழும் வாரங்கள் பெயராம்.

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, இப்பன்னிரண்டும், தமிழ் மாசங்களின் பெயராம்.

சனுவரி, பெபுருவரி, மார்ச்சு, ஏப்பிரில், மேய், சூன், சுலாய், ஆகஸ்து, செப்தெம்பர், அக்டோபர், நவம்பர், தசம்பர், இப்பன்னிரண்டும், சாதி மாசங்களின் பெயராம்.

கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, இவ்வெட்டுந், திசைகள் பெயராம்.

கோடைக்காற்று, கொண்டற்காற்று, தென்றற்காற்று, வாடைக்காற்று, பனிக்காற்று, சுழல்காற்று, பெருங்காற்று, இவை காற்றுகளாம்.

---

## எண்ணிலக்கச்சுருக்கம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வூ | ஈகூ | ஜஹு | ௰௧ | ௯௰ |
| ல | ௐ | ஜஸீ | ௰௨ | ௱ |
| 8 | வ | ௧ | ௰௩ | ௲ |
| சு | வப8 | ௨ | ௰௪ | ௰௲ |
| கூ | வஜு | ௩ | ௰௫ | ௱௲ |
| ப | வஸீ | ௪ | ௨௰ | ௰௱௲ |
| ப8 | ௨ | ௫ | ௩௰ | ௱௱௲ |
| பசு | ௨ப8 | ௬ | ௪௰ | கோடி. |
| பகூ | ௨ஜு | ௭ | ௫௰ | |
| ஐ | ௨ஸீ | ௮ | ௬௰ | |
| ஜு | ஜ | ௯ | ௭௰ | |
| ஈ | ஜப8 | ௰ | ௮௰ | |

## நெல்லிலக்கச்சுருக்கம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஷுவ | வரி | ருவ | தவுது | துள |
| கஷுவ | வரிஜு | சுவ | தஙு | ௰தள |
| உஷுவ | ஙத | எவ | உத | ௱தள |
| ஙஷுவ | ஙுதஜு | ங | உதங | ௰௱தள |
| சஷுவ | வ | வுது | உதஙு | ௱௱து— |
| ஜு | உவ | ஙு | ௧ள | கோடி— |
| ஜ | ஙவ | த | ௰ள | கலம் |
| ஜஜு | சவ | தங | ௱ள | |

---

## பணக்கணக்கு.

௰௨ பைசு............... ௧. அணா.
௰௬ அணா............... ௧. ரூபாய்.
௩½ ரூபாய்............... ௧. வராகன்.
௰௬ ரூபாய்............... ௧. மோரா.

---

## நிறைகணக்கு.

௨௰ மஞ்சாடி............ ௧. கழஞ்சு.
௰௨ கழஞ்சு............ ௧. பலம்.
௪௰ பலம்............ ௧. வீசை.
௫௰ பலம்............ ௧. இடை
௨ இடை............ ௧. துலாம்.

---

## அளவுகணக்கு.

௰௨ அங்குலம்.......... ௧. சாதியடி.
௧½ சாதியடி.......... ௧. முழம்.

௨ முழம்............. ௧. கெசம்.
௨௨ கெசம்............. ௧. சங்கிலி.
௱௬ சங்கிலி............. ௧. நாழிகைவழி.
௭½ நாழிகைவழி....... ௧. காதம்.

---

## காலக்கணக்கு.

௬௰ விநாடி............. ௧. நாழிகை.
௨½ நாழிகை............. ௧. மணி.
௨௪ மணி............. ௧. நாள்.
௭ நாள்............. ௧. வாரம்.
௪ வாரம்............. ௧. மாசம்.
௰௨ மாசம் அல்லது.... } ௧. வருஷம்.
௩௱௬௫ நாள்.......... }
௰௨ வருஷம்............. ௧. வியாழவட்டம்.